முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

OS.No.799/2021 பெயர்- சந்திரசேகரன் நாள்.14.10..2024

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்

**வா.சா.1 : 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

1ம் பிரதிவாதி ரூ.4 லட்சம் என்னிடம் கடன் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது. 18 சதவீதம் வட்டி தருவதாக சொன்னார். பணம் கொடுக்கும்போது வட்டி தருவதாக கூறினார். முடிந்தால் நடுவில் தருவதாக கூறினார். ஆனால் கூறியபடி நடுவில் வட்டி எதுவும் தரவில்லை. அவ்வாறு வட்டி எதுவும் தரவில்லை என்பது குறித்து பிரதிவாதிக்கு நான் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால், இல்லை. காசோலை திருப்பப்பட்டதற்கு பின்னிட்டு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். மேற்படி அறிவிப்பை 24.02.2018ல் அனுப்பினேன். 1ம் பிரதிவாதி அதற்கு பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால், சரிதான். அதற்கு பின்னிட்டு 06.12.2018ல் நான் காசோலை வழக்கு தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டதற்கு 8 மாதத்திற்கு பின்னிட்டு தான் மேற்படி அசல் வழக்கு எண்.871/2018 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால், சரிதான். அவர் பணம் தருவதாக கூறிக்கொண்டே இருந்தார். அதனால் காலதாமதம் ஏற்பட்டது. வழக்கு தாக்கல் செய்யப்பட்தற்கு பின்னிட்டு மனு

சொத்தின் வில்லங்க விவகாரங்கள் குறித்து சார்பதிவாளர் அலுவலகத்திற்கு தடங்கல் மனு எதுவும் கொடுத்தேனா என்றால், இல்லை. நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததால் அவ்வாறு மனு எதுவும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கொடுக்கப்படவில்லை. 24.02.2018ம் தேதிக்கு பின்னிட்டு மனு சொத்தை யாரும் கிரையம் பெறக்கூடாது என்று குறிப்பிட்டு பொது அறிவிப்பு எதுவும் கொடுத்தேனா என்றால், இல்லை. மனு சொத்தைப் பொறுத்து எந்த வில்லங்க விவகாரங்களும் இல்லாத காரணத்தினாலும், பொது அறிவிப்பு எதுவும் கொடுக்கப்படாத காரணத்தினாலும் 2ம் பிரதிவாதி மேற்படி சொத்தை சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் பெற்றார் என்றாலும், அவர் நல்லெண்ண கிரையதாரர் என்றாலும், சரியல்ல. அவர் கடன் விவகாரங்கள் அனைத்தும் தெரிந்தும் கிரையம் பெற்றுள்ளார். 1ம் பிரதிவாதி அவருடைய பணத்தை, 2ம் பிரதிவாதி வசம் கொடுத்து அதைக் கொண்டு 1ம் பிரதிவாதி வங்கிக்கடன் அடைத்துள்ளார். 2ம் பிரதிவாதி பெயரிலான கிரையப் பத்திரத்தை படித்துப பார்த்தேனா என்றால், படித்துப் பார்த்தேன். அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை 1ம் பிரதிவாதியின் தொகைதான். என்னுடைய பிராதில் 1ம் பிரதிவாதி அவருடைய பணத்தை, 2ம் பிரதிவாதி வசம் கொடுத்து அதைக் கொண்டு 1ம் பிரதிவாதி வங்கிக்கடனை 2ம் பிரதிவாதி மூலம் அடைத்துள்ளார் என்று சொல்லியுள்ளேனா என்றால், நினைவில் இல்லை. 1, 2 பிரதிவாதிகள், கிரையம் கொடுத்தவர், கிரையம் வாங்கியவர் என்ற வகையிலான பழக்க வழக்கம் உடையவர்கள்

என்றாலும், அவர்களுக்கு இடையில் வேறு பழக்க வழக்கம் கிடையாது என்றாலும், சரியல்ல. கிரையத்திற்கு முன்பாக 1, 2 பிரதிவாதிகளுக்கு இடையே சுமார் 6, 7 வருடங்கள் பழக்கம் என்று தெரியும். 2ம் பிரதிவாதியை எனக்கு 2012ம் வருடத்திலிருந்து தெரியும். 2ம் பிரதிவாதியின் சொந்த ஊர் எது என்று எனக்குத் தெரியாது. ஈ.பி.பி நகரில் குடியுள்ளார் என்பது தெரியும். 1ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் வைத்து அவரைப் பார்த்துள்ளேன். 2ம் பிரதிவாதி வியாபாரம் செய்து வருவதாக தெரியும். என்ன வியாபாரம், அவருடைய வருமானம் என்ன என்பது எனக்குத் தெரியாது. 2ம் பிரதிவாதி குறித்து அவ்வளவாக எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு சட்டப்படியான கிரையம் செய்து கொடுத்தற்கு பின்னிட்டு, 1ம் பிரதிவாதி என்னுடன் சேர்ந்து கொண்டு, 2ம் பிரதிவாதியிடமிருந்து சொத்தை அபகரிக்கும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நானும், 1ம் பிரதிவாதியும் வஞ்சக கூட்டு சேர்ந்து கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால் தான் நான் 1ம் பிரதிவாதி மீது குற்றவியல் வழக்கு எதுவும் தனியாக தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரியல்ல. இந்த வழக்கு காலவரை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.